பதை பொறுத்திருந்து பார்த்து விடுங்கள் என்று சொல்லுவதை, அதைக் கொடுப்பார்கள் என்று முன்கூட்டியே சொல்லிவிடுவதாக எடுத்துக்கொள்ள முடியாது. கேட்கிறார்கள். கொடுக்கிறார்களா இல்லையா என்று நாளைவரை பொறுத்திருந்து பாருங்கள் என்று சொல்வதில் எந்தவிதமான உரிமைப் பிரச்சினையும் கிடையாது. 1962-லே இந்த அவையிலேயே ஒரு தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள்.

'There is no question of privilege involved in a mere statement that taxes would be levied. This does not amount to Budget disclosure because the secrets contained in the Budget have not been disclosed.'

இப்படி வரி விதிக்கப்படும் என்று சொல்லுவது, வரி விதிக்கப்பட்டிருந்தும் கூட, ஒரு உரிமை மீறிய நிகழ்ச்சியாக, இரகசியம் வெளியிட்டதாக ஆகாது என்று இந்தப் பேரவையிலேயே தீர்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தெளிவாக, என்.ஜி.ஜி.ஓ.-க்களுக்கு இவ்வளவு ரூபாய் கொடுக்கப் போகிறார்கள் என்று கூறுவதுதான், பட்ஜட்டில் இருக்கும் இரகசியத்தை வெளியிட்டதாக இருக்கும். கொடுக்கிறார்களா, இல்லையா என்று பொறுத்திருந்து பாருங்கள். கொடுப்பதைப் பெற்றுக்கொள்ள தயாராகுங்கள் என்று சொல்வது நிதி நிலை அறிக்கையில் இருக்கும் இரகசியத்தை வெளியிட்டதாக ஆகாது. அப்படிச் சொன்னார் என்று செய்தி கொடுத்திருக்கும் அதே பத்திரிகையில் அடுத்த வரியில், தெளிவாக பட்ஜட்டில் வருவதைச் சொல்லக்கூடாது என்றும் அவர்களே சொல்லியிருப்பதாகவும் வெளிவந்திருக்கிறது.

அதோடு, கோரப்படும் நிவாரணம் பட்ஜட்டில்தான் கொடுக்கப்படவேண்டும் என்பதில்லை. பட்ஜட்டுக்கு முன்பேகூட, நிதி அமைச்சரோ, முதல் அமைச்சரோ, என்.ஜி.ஜி.ஓ-க்களுக்கு இவ்வளவு கொடுக்கப்படும் என்று சொல்ல முடியும். ஆக, என்ன என்று பொறுத்திருந்து பாருங்கள் என்பதாக சொல்லியிருப்பது நிதிநிலை அறிக்கையில் இருப்பதை முன்னாலேயே வெளியிட்டதாகாது. ஆகவே, இதில் எந்தவிதமான உரிமைப் பிரச்சினையும் இல்லை என்று தீர்ப்பு அளிக்கிறேன்.

(3) ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்

(அ) தமிழ் நாடு மின்சார வாரிய அலுவலர்களும் பொறியாளர்களும் "விதிமுறைப்படி வேலை செய்" கொள்கையைப் பின்பற்றுவதால் ஏற்பட்டுள்ள நிலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, நம்முடைய உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள்,

"The situation in the State arising out of the 'Work to Rule' policy that is being followed by the Engineers and Employees of the Tamil Nadu Electricity Board".

என்ற பொருள் குறித்து விவாதிக்க ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். மின்சார வாரியத் தலைவர் அவர்களோடு பேசி ஒரு முடிவுக்கு வரக்கூடிய சூழ்நிலை உருவாகியிருப்பதாலும்

அதோடு இது அரசினரின் அன்றாட நிர்வாகத்தில் வரக்கூடிய ஒரு நிகழ்ச்சி என்பதாலும், இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

Dr. H. V. HANDE : Sir, on a point of order . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'பாயிண்ட் ஆப் ஆர்டர்' என்று சொல்லும்போது, எந்த விதி மீறியிருக்கிறது என்று சொல்லிவிட வேண்டும்.

Dr. H. V. HANDE : On a point of order, Sir. Several hon. Members have given notice of adjournment motions and they have got letters privately from the Hon. Speaker to the effect that they could not be raised in the Assembly. But now in the case of the hon. Member, Thiru Ramamurthy, the Hon. Speaker has allowed him to read it out. I am not saying that there has been discrimination in regard to this matter. I am only trying to draw the attention of the Hon. Speaker to the way in which the rules have not been followed in all cases. I want to know the standard or basis on which adjournment motions are allowed and I request the Hon. Speaker to explain it.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதெதற்கு எப்படி முடிவு செய்யவேண்டும், என்ன தீர்ப்பு வழங்கவேண்டும் என்பதெல்லாம் பேரவைத் தலைவருக்கு உள்ள உரிமையாகும். அதை எப்படிக் கொடுப்பீர்கள், கொடுத்த தீர்ப்பு முறைதானா என்ற வகையில் இங்கு உறுப்பினர்கள் கேட்கக் கூடாது. உறுப்பினர்களுக்கு ஏதாவது குறையிருந்தால் அதனைப் பேரவைத் தலைவர் அவர்களுடைய அறையிலே வந்து கொடுக்க வேண்டுமென்பதுதான் மரபு.

திரு. எ. பாலசுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, நானும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். தாங்கள் ஒரு தீர்ப்பு கொடுத்து விட்டீர்கள். இன்ஜினியர்கள் வெளிநடப்பு நடத்தியிருக்கிறார்கள் என்ற விவரத்தைத்தான் சொல்ல வந்தோம் . . . . (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயிண்ட் ஆப் ஆர்டர் இருந்தால் சொல்லுங்கள். குறிப்பிட்ட நிகழ்ச்சி எந்த நிலையில் நடந்தது என்பதைப்பற்றியெல்லாம் சொல்ல வேண்டாம். நீங்கள் எந்த வகையில் இந்த அவையின் விதிமுறைகளை மீறியிருக்கிறது என்பதை மட்டும்தான் சொல்ல வேண்டும்.

திரு. ஏ. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே. 1972-க்குள் மின்சாரம் எல்லாக் கிராமங்களுக்கும் பரவ வேண்டும் . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படிப்பட்டவைகளையெல்லாம்பற்றி பேசுவதற்கு நிதிநிலை அறிக்கையின்மீது பேசும் பொழுது வாய்ப்பு இருக்கிறது. அவையெல்லாம் பாயிண்ட் ஆப் ஆர்டரின் கீழ் வராது.